நீதித்துறை நடுவர் எண் 3 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.

சி.சி 63/2021

2022ம் **ஆண்டு செப்டம்பர் மாதம் 06ம்** நாள் செவ்வாய்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய **அ.சா. 9** வது நபரின் வாக்குமூலம், (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.**எழிரலரசி** உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி
செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர | **செல்வி** | வயது: | 65 |
| த/பெ.(அ)க.பெ | **மணி** | தொழில்: | இல்லத்தரசி |
| ஊர் : | **வக்கணம்பட்டி** | சமயம்: | இந்து |
| வட்டம் : | திருப்பத்துாா | சாதி: | |
| மாவட்டம : | திருப்பத்துாா | | |

**முதல் விசாரணை=**

**நான் தற்போது வக்கணம்பட்டியில் வசித்து வருகிறேன். இல்லத்தரசியாக இருந்து வருகிறேன்.அ.சா.1 ஞானலட்சுமி எனக்கு துாரத்து சொந்தம். எதிரி மூர்த்தியை எனக்கு தொியும் அவா் ஞானலட்சுமியின் தம்பியாவாா். கடந்த 7.11.2016 அன்று பகல் 12 மணிக்கு ஜேசிபியை வைத்துக் கொண்டு ஞானலட்சுமிக்கு சொந்தமான கோனேரி குப்பத்தில் இருந்த இரண்டு வீடுகளை மூர்த்தி அவருடைய ஆட்களை வைத்து இடித்துக்கொண்டிருந்தாா். மேற்படி ஜேசிபியால் இடித்து தள்ளப்பட்ட வீட்டின் கல் மற்றும் மண் ஆகியவற்றை டிராக்டா் மூலம் அங்கிருந்து எடுத்து சென்றாா்கள். அப்போது நான் அந்த வழியாக என் அண்ணன் மகள் சிவகாமி என்பவா் ஞானலட்சுமியின் மேல் பகுதியில் இருந்தவரை பாா்க்க சென்றபோது மேற்படி சம்பவத்தை பாா்த்தேன். மேலும் அங்கிருந்த தென்னை,வேப்பமரம்,காட்டு வேலா மரம் ஆகியவற்றையும் மேற்படி மூர்த்தி தன்னுடைய ஆட்களை வைத்து வெட்டிக் கொண்டிருந்தாா். மேற்படி சம்பவத்தை நான்நேரில் பாா்த்ததேன். பின்னா் நான் என் அண்ணன் மகள் வீட்டிற்கு சென்றுவிட்டேன்.**

**எதிரி ஆஜாில்லை. எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை= இல்லை.**

<u>நீதித்துறை நடுவர் எண் 3 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.</u>

<u>சி.சி 63/2021</u>

2022ம் **ஆண்டு செப்டம்பர் மாதம் 06ம்** நாள் செவ்வாய்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய **அ.சா. 10** வது நபரின் வாக்குமூலம், (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.**எழிரலரசி** உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி
செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர | **உமா** | வயது: | 39 |
| த/பெ.(அ)க.பெ | **சரவணன்** | தொழில்: | இல்லத்தரசி |
| ஊர் : | **கட்டோரி** | சமயம்: | இந்து |
| வட்டம் : | திருப்பத்துாா | சாதி: | |
| மாவட்டம : | திருப்பத்துாா | | |

**முதல் விசாரணை=**

**நான் தற்போது கட்டோரியல் வசித்து வருகிறேன். இல்லத்தரசியாக இருந்து வருகிறேன்.அ.சா.1 ஞானலட்சுமி எனக்கு தொியும். எதிாி மூா்த்தியை தொியும் அவா் அ.சா.1 ஞானலட்சுமியின் தம்பி. நான் 07.11.2016 அன்று பகல் 12 மணியளவில் நான் என் தங்கை சிவசங்காி இருக்கும் வீரப்பள்ளி கிராமத்திற்கு சென்று கொண்டிருந்தேன். அப்போது கோனோிகுப்பம் கிராமம் வழியாக நான் சென்ற போது எதிாி மூா்த்தி ஜேசிபியை வைத்து ஞானலட்சுமிக்கு சொந்தமான வீட்டினை இடித்து அதை டிராக்டாில் வாாிக் கொண்டிருந்தாா். அப்போது 40,50 ரவுடிகள் கையில் வீச்சறிவாள், கத்தி பலவற்றை வைத்துக்கொண்டு அஙகே நின்று கொண்டடிருந்தாா்கள். மேற்படி ஞானலட்சுமியின் வீட்டிடம் இருந்த தென்னை மற்றும் வேப்பமரம் மற்றும் மாமரம் ஆகியவற்றினையும் மேற்படி மூா்த்தி அவருடைய ஆட்களை வைத்து வெட்டிவிட்டாா். மேற்படி சம்பவத்தினை நான் நோில் பாா்த்தேன்.**

**எதிாிகள் ஆஜாில்லை. எதிாிகள் தரப்பில் குறுக்கு விசாரணை= இல்லை.**